**<u>அரச சேவை ஆணைக்குழு</u>**

**<u>இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் 1 இன் உத்தியோகத்தர்களின் சேவை மூப்புநிலை மற்றும் தகுதி அடிப்படையில் அச்சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்தல்</u>**

இலக்கம் 1877/27 இனையுடைய 2014 ஆகஸ்ட் மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள, 1996/25 மற்றும் 2016 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2006.01.01 ஆந் திகதி முதல் வலுவிலிருக்கும் இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணத்தின் 10.3 ஆம் பிரிவு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின் படி தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு இலங்கை விஞ்ஞான சேவையின் I தரத்திற்கு தகுதி பெற்ற உத்தியோகத்தர்களை இச்சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வெற்றிடங்களின் எண்ணிக்கை:

| **தொடரிலக்கம்** | **அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்** | **பதவி** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **விடயம்** |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம் | பணிப்பாளர் நாயகம் (நியமன அதிகாரி அமைச்சரவை ஆகின்றார்) | 01 | விசேட தரத்திற்கு தரமுயர்த்தல் |

02. பதவியுயர்விற்கு முழுமைப்படுத்தியிருக்க வேண்டிய தகைமைகள்.

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருந்து அல்லது குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பில் பட்டப்பின் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

II. தரமுயர்விற்கான தகைமைகளைப் பெறும் திகதிக்கு இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தில் ஐந்து (05) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை முழுமைப்படுத்தியிருத்தல் மற்றும் முதற் தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு

முன்னர் சம்பள ஏற்றங்கள் ஐந்தினை (05) பெற்ற உத்தியோகத்தராக இருத்தல்.

III. தரமுயர்துவதற்கான தகைமை பெறும் திகதிக்கு இலங்கை விஞ்ஞான சேவையில் 18 வருடங்களுக்குக் குறையாத முனைப்புடனான சேவைக் காலத்தைப் பூரத்தி செய்திருத்தல்.

IV. தரமுயர்விற்கான தகைமை பெறும் திகதிக்கு உடன்முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் இருத்தல்.

V. அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை: 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியதாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

VI.

| **தொடரிலக்கம்** | **அமைச்சு / திணைக்களம்** | **பதவி** | **தகைமைகள்** |
|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம் | பணிப்பாளர் நாயகம் (நியமன அதிகாரி அமைச்சரவை ஆகின்றார்) | I தொடக்கம் V வரையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் உத்தியோகத்தராக இருத்தல். |

03. தரமுயர்த்தப்படும் முறை.

(i) அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விசேட தரத்திற்கு பதவியுயர்த்தும் நடவடிக்கை அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

(ii) நேர்முகப் பரீட்சையில் சேவை மூப்புநிலை மற்றும் தகுதிகள் மதிப்பீடு செய்யப்படும். அதற்கான இணைப்பு I இற்கான புள்ளிகள் வழங்கும் நடைமுறை பின்பற்றப்படும்.

04. அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும், இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும்,அப்பிரமாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கு கட்டுப்பட்டு, மேற்கூறப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இலங்கை விஞ்ஞான சேவையின் விசேட தரத்துக்கு

தரமுயர்த்தப்படுவார்கள்.

05. கீழ்வரும் மாதிரிப் படிவத்திற்கமைய முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் நிரல் அமைச்சின் செயலாளர் அல்லது நிரல் அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக கையொப்பம் இடுவதற்கு அதிகாரமளிக்கப்படடுள்ள உத்தியோகத்தர் முன்னிலையில் ஒப்பமிட்டு அவ்வொப்பத்தை நிரல் அமைச்சின் செயலாளர் ஊடாக சான்றுப்படுத்தி நிரல் அமைச்சின் செயலாளரது பரிந்துரையுடன், பதிவுத் தபாலில் 2023 செப்டெம்பர் மாதம் 27 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் “செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.” என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை விஞ்ஞான சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்தல்” என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

07. இவ்வறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுவதுடன் அப்பிரதிகளுக்கிடையில் ஏதேனும் இணக்கப்பாடின்மை காரணப்படின் சிங்கள பிரதியே வலுவானதாகும்.

விண்ணப்பப்படிவம் www.pubad.gov.lk இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஒப்பம் ./ கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
2023 செப்டெம்பர் மாதம் ............. ஆந் திகதி

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

**<u>இலங்கை விஞ்ஞான சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு புள்ளி வழங்கும் நடைமுறை</u>**

**01. சேவை மூப்புநிலை ( 60 புள்ளிகள்)**

- கூடியசேவை மூப்பு உத்தியோகத்தருக்கு அதிகபட்ச புள்ளிகள் வழங்கப்படும்
- மற்றைய உத்தியோகத்தர்களின் சேவைமூப்பு =

சேவை மூப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளி
———————————————
கூடியசேவை மூப்பு உத்தியோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடம் x12+மாதம்)

x குறித்த உத்தயோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடம் x12+மாதங்கள்)

**02. திறமைகள் ( 40 புள்ளிகள்)**

I.

| | **அதிகபட்ச புள்ளிகள்** |
|---|---|
| I. துறையுடன் தொடர்பான தனி மற்றும் குழு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள ; | 08 |
| i. ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள் (Research Publication) (குழு ரீதியான வெளியீடுகளாயின் குறித்த உத்தியோகத்தரின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வெளியீடுகள் என திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்) - ஒரு வெளியீட்டுக்கு 04 புள்ளிகள் வீதம்<br>அதிகபட்சம் 02 வெளியீடுகளுக்காக | |
| ii. சுருக்கக் குறிப்பு (Abstract) | |
| ➢ இலங்கையினுள் (Local ) - ஒரு சுருக்கக் குறிப்பிற்காக 02 புள்ளிகள் வீதம் ( அதிகபட்சம் 02 சுருக்கக் குறிப்புகளுக்காக) | |
| ➢ சர்வதேச (International ) - ஒரு சுருக்கக் குறிப்பிற்காக 02 புள்ளிகள் வீதம் | |

| | | |
|---|---|---|
| | (அதிபட்சம் 2 சுருக்கக் குறிப்புக்களுக்காக) | |
| II. | ஆய்வுக் கட்டுரை - ஒரு ஆய்வுக் கட்டுரைக்கான புள்ளி 2.5 வீதம்<br><br>(இரண்டாம் வினைத்திறன் தடை தாண்டல் அல்லதுl ஆந் தரத்திற்கு கருத்திற் கொள்ளப்படும் பட்டப்பின் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரை தவிர்ந்த ஏனைய ஆய்வுக் கட்டுரைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)<br>(அதிகபட்சம் 2 ஆய்வுக் கட்டுரைகளுக்காக) | 05 |
| III.<br>IV. | புத்தாக்கம் / கண்டுபிடிப்பு - குறித்த உத்தியோகத்தர்களின் தலைமையின் கீழ் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கங்கள் என திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்<br>( ஒரு புத்தாக்கம் / கண்டுபிடிப்பிற்காக 04 புள்ளிகள் வீதம்)<br><br>(அதிகபட்ச புத்தாக்கங்கள் / கண்டுபிடிப்புக்கள் 2 இற்காக) | 08 |
| V. | செய்தித்தாள் / சஞ்சிகைக் கட்டுரைகள் - பொது மக்களுக்கு விழிப்பூட்டும் வகையில் தம்மால் எழுதப்பட்ட கட்டுரைகள் (ஒரு செய்தித்தாள் / சஞ்சிகைக்கு 02 புள்ளிகள் வீதம்)<br><br>(அதிகபட்சம் 2 செய்தித்தாள் / சஞ்சிகைக் கட்டுரைக்களுக்காக) | 04 |
| மொத்தப் புள்ளிகள் | | 25 |

II. பவர் பொயின்ட் காட்சியளிப்பு (Power Point Presentation) (15 புள்ளிகள்)

மேற்படி I. இல் குறிப்பிடப்பட்டுள்ள புத்தாக்கம் / கண்டுபிடிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கணனி உதவியுடன் (Power Point) மேற்கொள்ளப்படும் 10 நிமிட காட்சியளிப்பு.

i. தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியின் செயல்திறனுக்கான நோக்கங்களும் பார்வைக்கும் இடையிலான உறவு - (Objective & Vision related to the Performance of the post to be Selected) - 03 புள்ளிகள்
ii. இயைபுடமை (Relevancy) - 03 புள்ளிகள்
iii. ஆக்கபூர்வத்தன்மை / புத்தாக்கம் (Creativity / Innovation) - 03 புள்ளிகள்
iv. நேர முகாமைத்துவம் (Time Management) - 03 புள்ளிகள்
v. ஆங்கில மொழித் தேர்ச்சி (Proficiency) - 03 புள்ளிகள்

குறிப்பு -

அ) மேற்படி (v) இன் தேர்வளவின் கீழ் புள்ளி வழங்கப்படுவது விண்ணப்பதாரி ஆங்கில மொழியின் மூலம் இக்காட்சியளிப்பை சமர்ப்பித்தால் மாத்திரமேயாகும்.

ஆ)சமர்ப்பிப்பதற்குரிய வன் பிரதிகள் (HardCopy) நேர்முகப் பரீட்சைக் குழுவிடம் அச்சந்தர்ப்பத்தில் கையளித்தல் வேண்டும். மேலதிகமாக ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டு முன்னளிக்கப்பட்ட காட்சியளிப்பின் வன்பிரதியையும் அச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

.......................................................... திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக விண்ணப்பித்தல்

1. உத்தியோகத்தர் தொடர்பான தகவல்
   i. முழுப் பெயர்: (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்):....................................................
   ...................................................................................................................
   (உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
   ii. முதலெழுத்துக்களுடன் பெயர்:- (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)Mr./Mrs./Miss
   :..................................................................................................................
   (உதா: GUNAWARDHANA, H. M. S. K.)
   iii. முழுப் பெயர் (சிங்களத்தில்):........................................................................
   ...................................................................................................................
   iv. பிறந்த திகதி:..............................................................................................
   v. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
   வரு........... மாதம்.................திகதி...................
   vi. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ................................................
   vii. நிரந்தர முகவரி: …………………………………………………………….....................
   .................................................................................................................
   viii. தொலைபேசி இலக்கம் :-அலுவலகம் : .........................கையடக்க :....................
   ix. மின்னஞ்சல் முகவரி:………………………………………………………………

2. பதவி தொடர்பான தகவல் :
   i. தற்சமய சேவை நிலையமும் முகவரியும் :
   ii. IIIஆந் தரத்துக்கு நியமனம் வழங்கப்பட்ட திகதி :-
   iii. IIஆந் தரத்துக்கு நியமனம் வழங்கப்பட்ட திகதி :-
   iv. Iஆந் தரத்துக்கு நியமனம் வழங்கப்பட்ட திகதி :-
   v. தற்போது வகிக்கும் பதவி :
   vi. அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :-
   vii. .................................... ஆந் திகதிக்கு III ஆந் தரத்தின் சேவைக் காலம்:
   viii. ...................................... ஆந் திகதிக்கு I ஆந் தரத்தின் சேவைக் காலம்:

3. சேவை மூப்புநிலை

| | | |
|---|---|---|
| 01 | விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு இலங்கை விஞ்ஞான சேவையில் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலம் | |
| 02 | விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு இலங்கை விஞ்ஞான சேவையில் தரம் I இல் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலம் | |
| 03 | சம்பளமற்ற லீவுகள் பெற்றுள்ளார் / இல்லை என்பது பற்றி ( சம்பளமற்ற லீவுகள் எடுத்திருப்பின் பெறப்பட்ட நாட்களைக் குறிப்பிடவும்) | |

4. துறைக்குரிய தகைமைகள் :

4.1. குறித்த துறையில் ஈடுபாடு காட்டிய விசேட பங்களிப்பு

| **ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்** | **விபரம்** | **குறித்த ஆண்டு** |
|---|---|---|
| ஆராய்ச்சி ரீதியான ளியீடுகள் சுருக்கம் | | |
| ஆய்வுக் கட்டுரை | | |
| புத்தாக்கம் / கண்டுபிடிப்புக்கள் | | |
| செய்திக் கட்டுரைகள் | | |

❖ ஆராய்ச்சியின் சுருக்கம் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**5.** விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்குறிப்பிட்ட தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதுமென இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ...........................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

II ஆம் பகுதி

( திணைக்களத் தலைவரினால் நிரப்புதல் வேண்டும்)

......................................................................................... திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I இன் உத்தியோகத்தரான ................................................................................................. ........................................................ திரு / திருமதி / செல்வியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் பிரத்தியேகக் கோவையில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப சரியானது/பிழையானது. அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைச் செயற்பாடுகள் எதுவும் இல்லை / எடுக்கப்பட்டுள்ளது எனவும், அவ்வாறான செயற்பாடொன்று எதிர்வரும் காலங்களில் எடுப்பதற்கு கருதுவதாகவும் / இல்லை எனவும், விண்ணப்பங்கள் கோரும் திகதிக்கு உடன்முன்னரான 05 வருட சம்பள ஏற்றத்தை உழைத்துள்ளார் / இல்லை எனவும், தயவுடன் அறியத்தருகின்றேன். அவரின் விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்./ செய்யவில்லை.

..........................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

உத்தியோகபூர்வ பதவி முத்திரை

திகதி